DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.209/2023 | Deposition of Witness for : PW1 |
| Name : சாரதி | Father/Husband Name : ஜெயகோபால் |
| Age : 45 | Village : தேரிப்பனை |
| Taluk : ஏரல் | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09 February 2026.
Accused A1, A3 present. A2 Died.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது தேரிப்பனையில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 1 மற்றும் 3 எதிரிகளை தெரியும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 28.03.2023 ஆம் தேதி 1ஆவது எதிரி எங்கள் இடத்தில் உள்ள கம்பிவேலியை உடைத்து சேதப்படுத்தினார். இதுசம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேன்.

2. பின்பு 31.03.2023 ஆம் தேதி காலை 7.30 மணியளவில் நான் எனக்கு உரிய இடத்தில் இருந்தேன்.அப்போது எனது அண்ணன் சித்திரைக்குமார் அங்கு வந்தார். அப்போது அங்கு வந்த எதிரிகள் என்னைப் பார்த்து தேவடியா மகளே என்று ஆபாசமாக பேசி எங்கள் இடத்தில் உள்ள கம்பிவேலியை அடித்து உடைத்தார்கள். மேலும் என்னை மானபங்கமாக பேசினார்கள். மேலும் இந்த இடம் எங்களுக்கு சொந்தம் என்றும் கூறினார்கள். அருகில் இருந்து எனது அண்ணன் எதிரிகளை சத்தம் போட்டார். மேலும் நாங்கள் போலீஸ்க்கு தகவல் கொடுத்தோம். உடனே எதிரிகள் சென்றுவிட்டார்கள். எதிரிகள் உடைத்த கம்பி வேலியின் மதிப்பு சுமார் ரூ.40,000/- இருக்கும். இதுசம்பந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** : இல்லை

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.09 16:19:02 +0530

Judicial Magistrate, Sathankulam.